மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சரின் பதிலுரை

நாள்–7.8.206

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உலகளாவிய தமிழ்ச் சமுதாயத்தின் இதய பீடத்தில் எழுச்சி முரசமாக, இன உணர்வு கீதமாக, திராவிடத் தென்றலாக, என்றும் அணையாத இலட்சிய



தீபமாக வீற்றிருக்கும் கொள்கை இமயம் – அமைதியின் சின்னம் – ஆற்றலின் உருவம் – அறிவுக் கருவூலமாம் பேரறிஞர் அண்ணாவின் அன்புத் தம்பியும், எங்கள் குடும்பத்தலைவரும், கழகத்தலைவருமான தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், மூன்றாவது முறையாக என்னைத் தொடர்ந்து சட்டமன்ற

உறுப்பினராகவும், இரண்டாவது முறையாக அமைச்சராகவும் அமர்த்தி, பெருமைமிகு இம்மாமன்றத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மானியக் கோரிக்கையின் மீது பதிலளிக்க வாய்ப்பளித்தமைக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத்



தெரிவித்துக் கொண்டு என் உரையைத் தொடங்குகிறேன்.

தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் என்பது நாம் அறிந்தது ஆகும். இவர்களின் வறுமை அகல வேண்டும், வாழ்வு உயர

வேண்டுமெனில் கல்வி அறிவு மிகவும் இன்றியமையாதது. இம்மக்களின் தேவையை உணர்ந்து அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன்,

1969ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட மக்களின் மேம்பாட்டிற்காக



''பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை'' என்ற ஒரு தனித்துறையை அமைத்தது முதல்வர் கலைஞர்தான்.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலனுக்காக 1989–ஆம் ஆண்டு ''மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்பிற்படுத்தப்பட்டோர்,

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்’’ என்ற தனித்துறையை உருவாக்யிதும் இதே முதல்வர் தலைவர் கலைஞர்தான்.

சிறுபான்மையினரின் நலனுக்காக பிற்படுத்தப்பட்டோர், மிகவும்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை என



1999ல் பெயர் மாற்றம் செய்ததும் தமிழனத்தலைவர் கலைஞர்தான்.

சிறுபான்மையின மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார முன்னேற்ற கழகம் (TAMCO)

அமைத்ததும், தலைவர் கலைஞர்தான்.

தனியார் கல்வி நிறுவனங்களில் 69 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கும் சட்டம் கொண்டு வந்ததும் நம்முடைய முதல்வர் கலைஞர்தான்.



மத்திய அரசின் கல்வி நிறுவனங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவீதம் இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று இந்த மன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்ததும் முதல்வர் கலைஞர்தான்.

அந்தந்த மாநிலங்களில் வாழும் பிற்படுத்தப்பட்டோர்,

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கைக்கேற்ப இட ஒதுக்கீடு அளவை அந்தந்த மாநிலங்களே நிர்ணயிக்கும் வகையில் அரசியலமைப்பு சட்டம் திருத்தப்பட மத்திய அரசை வலியுறுத்துவதும் தலைவர் முதல்வர் கலைஞர்தான்.



பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மொத்த நிதி ஒதுக்கீட்டில் கல்விக்காக மட்டும் 76 சதவீதம் (240 கோடி அளவில்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதன் மூலம் கல்விக்கு இந்த அரசு தரும் முக்கியத்துவத்தை மாண்புமிகு

உறுப்பினர்கள் அறிந்துக் கொள்ளலாம்.

கள்ளர் சீரமைப்பு பள்ளிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதிலும் பராமரிப்புக்குத் தேவையான நடவடிக்கைகளை செய்து கொடுப்பதிலும் இந்த அரசு முனைப்பாக உள்ளது.



கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் எழுது பலகைகள், நோட்டு புத்தகங்கள், சீருடைகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. இதற்காக 26 கோடியே 82 இலட்சத்தி 31 ஆயிரம் ரூபாய் இந்த அரசு ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதும் கலைஞர் ஆட்சியில்தான்.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்களின் நலனில் அக்கறை கொண்ட இந்த மாநில மற்றும் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ/மாணவியர்களுக்கு பொதுப்பரிசுகளும், மேலும் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண்கள்



பெற்று தொழிற்கல்வி மற்றும் பட்டயப்படிப்பு பயில்பவர்களுக்கு முறையே அண்ணா பெயரிலும், தந்தை பெரியார் பெயரிலும் பரிசுகள் வழங்கி வருகிறது.

## <u>2006–2007-க்கான புதிய அறிவிப்புகள்</u>

1) 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் 50 புதிய விடுதிகள் இந்த

ஆண்டே துவங்கப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2) 2 கோடி ரூபாய் செலவில் 2000 இளைஞர்களுக்கு டிப்ளமோ இன் கம்ப்யூட்டர் அப்ளிகேஷன் பயிற்சி அளிக்கப்படும்.



3) 1 கோடியே 64 இலட்சம் ரூபாய் செலவில் 1000 இளைஞர்களுக்கு கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்படும்.

4) 1 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவில் 3000 இளைஞர்களுக்கு டெலிவிஷன் மெக்கானிக் பயிற்சி அளிக்கப்படும்.

5) 1 கோடி ரூபாய் செலவில் 1000 மகளிருக்கு கிளினிக்கல் நர்ஸிங் அசிஸ்டண்ட் பயிற்சி வழங்கப்படும்.

6) 60 இலட்சம் ரூபாய் செலவில் 500 இளைஞர்களுக்கு டிப்ளமோ இன் 2 டி மற்றும் 3 டி அனிமேஷன் பயிற்சி வழங்கப்படும்.



7) 40 இலட்சம் ரூபாய் செலவில் 200இளைஞர்களுக்கு கதிரியல் (Radiology) பயிற்சி வழங்கப்படும்.

8) 35 இலட்சம் ரூபாய் செலவில் 500 இளைஞர்களுக்கு மெடிக்கல் ட்ரேன்ஸ்கிரிப்ஷனிஸ்ட் பயிற்சி வழங்கப்படும்.

9) 28 இலட்சம் ரூபாய் செலவில் 300இளைஞர்களுக்கு 'ஓட்டல் வரவேற்பாளர்' பயிற்சி அளிக்கப்படும்.

10) 21 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் செலவில் 300 இளைஞர்களுக்கு உணவு தயாரித்தல் பயிற்சி வழங்கப்படும்.



11) 20 இலட்சம் ரூபாய் செலவில் 100 இளைஞர்களுக்கு பிளாஸ்டிக் பதனம் செய்யும் இயந்திரம் இயக்கும் பயிற்சி வழங்கப்படும்.

12) 18 இலட்சம் ரூபாய் செலவில் 1000இளைஞர்களுக்கு டெஸ்க்டாப் பப்ளிஷ்சிங் (DTP) பயிற்சி வழங்கப்படும்.

13) 15 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாய் செலவில் 500 மகளிருக்கு அழகுக்கலைப் பயிற்சி வழங்கப்படும்.

14) 14 இலட்சம் ரூபாய் செலவில் 300இளைஞர்களுக்கு உணவு மற்றும் பரிமாறுதல் பயிற்சி வழங்கப்படும்.



15) 14 இலட்சம் ரூபாய் செலவில் 200 இளைஞர்களுக்க பேக்கரி மற்றும் கன்பெக்ஷனரி பயிற்சி வழங்கப்படும்.

16) 13 இலட்சம் ரூபாய் செலவில் 50இளைஞர்களுக்கு ஓட்டல் பராமரிப்பில் முதுநிலை பட்டயப்படிப்பு பயிற்சி வழங்கப்படும்.

இதுபோன்ற வேலை வாய்ப்பு பயிற்சிகளுக்கு கழக அரசு நடப்பாண்டில் **10** கோடி ரூபாய் செலவில் **42** வகையான வேலைவாய்ப்பு பயிற்சி **13290** வேலையற்ற இளைஞர்களுக்கு அளிக்கப்படும் என்பதை மாமன்ற உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



**17)** **85** இலட்சம் ரூபாய் செலவில் **5000** நபர்கள் பயன்பெறும் வகையில் **5000** சலவைப்பெட்டிகள் இந்த ஆண்டு வழங்கப்படும்.

**18)** தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் (TABCEDCO) மூலமாக **1000** நபர்களுக்கு ரூபாய் **3000/–** கடனாகவும், அரசு மானியமாக ஒரு

நபருக்கு ரூபாய் 2000/–மும் ஆக மொத்தம் ரூபாய் 5000/– செலவில் நடமாடும் சலவையகம் வழங்கப்படும். இதற்கு கழக அரசு 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



19) வீட்டு மனையே இல்லாமல் வறுமைக்கோட்டிற்கு கீழே வாழும், பிற்படுத்தப்பட்ட, மிகவும்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டு வருகிறது. முற்பட்ட வகுப்பினர்களுக்க இலவசமாக வீட்டு மனைப்பட்டா வழங்கும்

திட்டம் இந்த அரசால் 1997–98ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

1996ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டு வரையிலான ஐந்தாண்டுகளில் மட்டும் 61 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவில் 1 இலட்சத்து 54 ஆயிரத்து 99 இலவச வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டது. ஆனால், 2001ஆம் ஆண்டு முதல்



2006ஆம் ஆண்டு வரையிலான அ.தி.மு.க. ஐந்து ஆண்டு கால ஆட்சியில் 2 கோடியே 92 இலட்ச ரூபாய் மட்டுமே இத்திட்டத்திற்கு செலவிடப்பட்டு, 6 ஆயிரத்து 869 நபர்களுக்கு மட்டுமே இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சியில் 2002– 2003ஆம் ஆண்டிலிருந்து இந்த திட்டம் முழுமையாக கைவிடப்பட்டது.

5–வது முறையாக பொறுப்பேற்றிருக்கும் கலைஞர் அவர்கள் இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை கருதி 5 கோடியே 25 இலட்சம் ரூபாய்



ஒதுக்கியுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

20) 18 மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களுக்கு தொலைபேசி இணைப்புடன் கூடிய நிகரி மற்றும் ஒளி நகல் இயந்திரம் 12 இலட்சத்து

6 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

21) பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ/மாணவியர் விடுதியில் தங்கி பயிலும் 32 ஆயிரத்து 663 மாணவ/மாணவியர்களுக்கு போர்வைகள் வழங்கப்பட உள்ளது. இதற்கென இந்த ஆண்டு 32



இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

22) 100 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளுக்கு மாவரைக்கும் இயந்திரங்கள் 8 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

23) 200 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளுக்கு 22 இலட்சம் ரூபாய்

செலவில் குடிநீர் சுத்திகரிப்பு கருவிகள் வழங்கப்படும்.

24) 71 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளுக்கு 7 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவில் விடுதி நூலகங்களுக்கு பாடக்குறிப்பு புத்தகம் வழங்கப்படும்.



25) 24 இலட்சம் ரூபாய் செலவில் 8 கள்ளர் சீரமைப்பு மேல் நிலைப்பள்ளிகளுக்கு கணினிகள் வழங்கப்படும்.

26) 34 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் 23 கள்ளர் சீரமைப்பு உயர்நிலைப்பள்ளிகளுக்கு கணினிகள் வழங்கப்படும்.

27) 5ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரையில் படிக்கும் மாணவ/மாணவியர்களின் நலன் கருதி ஒருங்கிணைந்த இருக்கையுடன் கூடிய மரத்திலான எழுதுமேசை 2 கோடியே 9 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.



இந்த மானியக்கோரிக்கை தொடர்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கிய ஆலோசனைகளுக்கும், கருத்துக்களுக்கும் ஏற்புடைய வகையில் விளக்கங்கள் அளித்துள்ளேன் என்று கருதுகிறேன்.

வெட்டுத்தீர்மானங்களின் மூலம் சுட்டிக்காட்டியவற்றை நன்கு பரிசீலித்து, உரிய வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, வெட்டுத் தீர்மானங்களை அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள்



அவற்றை திரும்பப்பெற்று இம்மானியக்கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்**
**பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

பதிவுத்துறையானது 1865ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

அரசுக்கு வருவாயை ஈட்டித்தருவதில் பதிவுத்துறை மூன்றாவது இடத்தில் உள்ளது.

முத்திரைத்தீர்வை ஏய்ப்பைத் தடுத்து வருவாயைப் பெருக்கிட கழக அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. கடந்த ஆண்டில் அதாவது மே 2005 முதல் சூலை 2005 வரையிலான 3 மாதங்களில் அரசுக்கு கிடைத்த வருவாய் 538 கோடி ரூபாயாகும்.



ஆனால் நடப்பு ஆண்டில் அதாவது மே 2006 முதல் சூலை 2006 வரையில் 3 மாதங்களில் மட்டும் கிடைத்த வருவாய் 739 கோடி ரூபாயாகும்.

இதனால் அரசுக்கு அதிகமாக கிடைத்த வருவாய் 201 கோடி ரூபாய் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

போலியாக பத்திரங்களை பதிவு செய்வதையும் பினாமியாக சொத்துக்களை பதிவு செய்வதையும் தடுக்கும் வகையில் சொத்துக்களை விற்பவரும், வாங்குபவரும் அவர்கள் புகைப்படத்தினை பத்திரங்களில் கட்டாயம் ஒட்டி

அதன்மீது கையொப்பம் இட வேண்டும் என்று கழக அரசு பொறுப்பேற்றவுடன் 1.7.2006 முதல் நடைமுறைப்படுத்தி வருகிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனால் போலியாக ஆவணங்கள் பதிவு செய்வது தடுக்கப்பட்டுள்ளது. போலி முத்திரைத்தாள்களின் புழக்கத்தினை முற்றிலும் தடுக்கும் வகையில் மாற்று ஏற்பாடாக மின்னணு முறையில் முத்திரையிடும் முறையை (e-stamping) அறிமுகப்படுத்துவது குறித்து இந்த அரசு பரிசீலித்து வருகிறது. இதன் காரணமாக போலி முத்திரைத்தாள்கள் பயன்படுத்துவது முற்றிலும்



தடுக்கப்படுவதுடன் அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பும் தவிர்க்கப்படும்.

மேலும், போலி ஆவணங்களை தவிர்க்க ‘‘ஹாலோகிராம்‘‘ ஒட்டுவில்லைகளை ஆவணங்களில் ஒட்டவும் கழக அரசு ஆணையிட்டுள்ளது.

அங்கீகரிக்கப்படாத வீட்டு மனைகளை பத்திரப் பதிவு செய்ய வேண்டுமானால் உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து / நிறுவனங்களிடமிருந்து தடையின்மைச் சான்று (NOC) பெற வேண்டுமென 22.9.2000ம் நாளிட்ட வணிக வரித்துறை அரசு ஆணை எண்.150ல் ஆணையிடப்பட்டுள்ளது.

இதுபோன்று ராஜஸ்தான் மாநில அரசால் வெளியிடப்பட்ட அரசாணையை செல்லாது என ஒரு வழக்கில் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

எனவே, அங்கீகரிக்கப்படாத வீட்டு மனைகளை பதிவு செய்வதற்கு முன் உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து தடையின்மை சான்றிதழ் வாங்க வேண்டும் என வெளியிடப்பட்டுள்ள அரசு ஆணையை விலக்கிக் கொள்வது குறித்து பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.



அறிவிப்புகள் :-

இந்த துறை சம்மந்தமாக சில அறிவுப்புகளை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் அறிவிக்க விரும்புகிறேன்.

பத்திர பதிவு அலுவலகங்களுக்கு வரும் பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரும் வகையில்,

உட்காருவதற்கென நாற்காலிகள்,

குடிநீர் வசதி,

ஆவணங்களை வைத்து எழுதுவதற்கு வசதியாக சுவரில் பொருத்தப்பட்ட பலகைகள்,

ஆவணப்பதிவு நடைமுறைகளைத் தெரிந்து

கொள்ளும் வகையில்
அறிவிப்புப்பலகைகள்

ஆகியவை அமைக்கப்படும்.

முதற்கட்டமாக 60 லட்சம் ரூபாய் செலவில் ஒரு அலுவலகத்திற்கு 20 ஆயிரம் ரூபாய் வீதம் 300 சார்பதிவாளர் அலுவலகங்களில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

(2) தமிழ் நாட்டில் உள்ள 558 சார் பதிவாளர் அலுவலகங்களில் 450 சார் பதிவாளர் அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 108 சார் பதிவாளர் அலுவலகங்கள் கணினிமயமாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



558 சார் பதிவாளர் அலுவலகங்களில் 255 அலுவலகங்கள் மட்டும் வாடகை கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இப்படி வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு படிப்படியாக அரசு சொந்த கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுத்து, நடப்பு ஆண்டில் மட்டும் 15 அலுவலக கட்டடங்கள் கட்டப்படும்.

ஆனால், முந்தைய ஐந்து ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் இரண்டே இரண்டு அலுவலக கட்டடங்கள் மட்டுமே கட்டப்பட்டுள்ளது.

(3) பதிவு செய்யப்படும் ஆவணங்களின் நகல்கள் கோரி பெருமளவில் விண்ணப்பங்கள் வருவதால் 60 லட்சம் ரூபாய் செலவில், 60

சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு படிபெருக்கி **(Xerox)** இயந்திரங்கள் வழங்கப்படும்.

**(4)** பதிவு செய்யப்படும் ஆவணங்களில் ஆவணதாரரின் பெருவிரல் ரேகையைப் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதனை நவீன கருவிகள் மூலம் **(Bio-Metric Device)** பதிவு செய்ய பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

இந்த மானியக்கோரிக்கை தொடர்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கிய ஆலோசனைகளுக்கும், கருத்துக்களுக்கும் ஏற்புடைய வகையில் விளக்கங்கள் அளித்துள்ளேன் என்று கருதுகிறேன்.

வெட்டுத்தீர்மானங்களின் மூலம் சுட்டிக்காட்டியவற்றை நன்கு பரிசீலித்து, உரிய



வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, வெட்டுத்தீர்மானங்களை அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றை திரும்பப்பெற்று இம் மானியக் கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்

## பதிவுத்துறை

## அறிவிப்புகள்

1 108 சார்பதிவாளர் அலுவலகங்கள் கணினிமயமாக்கப்படும்.

2 முத்திரைத் தீர்வையை செலுத்த மாற்று முறை அறிமுகப்படுத்தப்படும்.

3 விவசாயிகள் மற்றும் சிறுதொழில் முனைவோர்கள் பயனடையும் விதமாக உரிமை ஆவண, ஒப்படைப்பு ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை விலக்கு வழங்கப்படும்.

மேற்கூறிய முத்திரைத் தீர்வை விலக்களிப்பை 22.7.2006 முதல் நடைமுறைப்படுத்தி, 1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின் கீழ் உரிய அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

4 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு



வரும் பொதுமக்களுக்கு தேவைப்படும் வசதிகள் ரூ.60 இலட்சம் செலவில் 300 சார்பதிவாளர் அலுவலகங்களில் செய்யப்படும்.

5 ரூ.60 இலட்சம் செலவில் 60 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு ஜெராக்ஸ் நகல் எடுக்கும் இயந்திரங்கள் வழங்கப்படும்.

6 பதிவு அலுவலகங்களுக்கு ரூ.38.25 இலட்சம் செலவில் 510 அலமாரிகள் வழங்கப்படும்.

7 பதிவுத்துறை தலைவர் அலுவலகத்திற்கு ரூ.10 இலட்சம் செலவில் மின் ஆக்கி இயந்திரம் (Generator) அமைக்கப்படும்.

8 ரூ . 225 இலட்சம் செலவில் 15 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடம் கட்டப்படும்.

எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்
பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும்
பதிவுத்துறை அமைச்சர்